திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி ஏன் மருந்தகங்கள் அமைக்கவில்லை? கால்நடை மருந்தகங்களை அமைக்க மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்து உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் ஒன்றும் அளிக்கவில்லை. வேளாண்மைக் குழு 1980 ஆம் ஆண்டில் 20 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவரும், அதற்குப் பிற்பாடு 15 ஆயிரம் கால் நடைகளுக்கு ஒரு மருத்துவரும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பணம் இல்லாத காரணத்தால் அது அமல்படுத்தப் படவில்லை.

திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்தல்.

91—(*வினா எண் 9117) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 33/11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

பென்னாகரத்தில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள்

92—(*வினா எண் 9649) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பென்னாகரம் தொகுதியில் எத்தனை இடங்களில் இளம் பட்டுப்புழுவளர்ப்பு மையங்கள் நடைபெற்று வருகின்றன?

(ஆ) நெருப்பூர், ஏரியூர் பெரும்பாளை ஆகிய ஊர்களில் மையங்கள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பென்னாகரம் தொகுதியில் **நெருப்பூர், காட்டூர், ஆணைக்கல்லானூர், சின்னப்பட்டி, பிக்கம்**

1986 நவம்பர் 19]

பட்டி, காலைக் குளாத்திரம்பட்டி, நாகதாசம்பட்டி, வத்மரத் ஹள்ளி ஆகிய எட்டு இடங்களில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) நெருப்பூரில் ஏற்கனவே இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் பட்டுத் தொழில் ஏரியூரிலும், பெரும்பாளையிலும் அதிகம் வளர்ச்சி அடைந்தால், அங்குள்ள விவசாயிகளுக்கு தேவைக்கேற்ற அளவிற்கு இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் அங்கேயே துவக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த கிராமங் களில் எல்லாம் இளம் பட்டுப்புழு வளர்க்கின்ற நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். நன்றி. அதோடு தர்மபுரி மாவட்டத்தில் இன்னும் எத்தனை இடங்களில் இதுபோன்ற இளம் பட்டுப்புழு உற்பத்தி செய்கிற நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன? மேலும் அமைக்க இருக்கிற இடங்களைத் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்தினுடைய மொத்த பட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு அங்கே உற்பத்தி ஆகிறது. அதிலே ஏறக்குறைய 17 திட்டங்களின் மூலமாக 67 மையங்களில் இப்படிப்பட்ட விதைப் பண்ணைகள், பட்டுப்புழு வளர்ச்சிப் பண்ணைகள், விதை உற்பத்தி மையங்கள், பட்டு முறுக்காலை போன்ற 67 மையங் கள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடந்து வருகின்றன.

ஜெயங்கொண்டத்தில் முந்திரித் தோலிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை.

93—(*வினா எண் 9948) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரித் தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரியைத்தான் அங்குள்ள விவசாயிகள் அதிகமாக பயிரிடுகிறார்கள். அங்கே தனியாருக்குச் சொந்தமான நான்கு தொழிற்சாலைகளில், அந்த முந்திரிகள் பிராசஸ் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு